அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி; 23628

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மார்கழி மீ 23 ௳ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 6 (07-01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 36

### வ. பி. போ. சபைக்கு

# தடுத்துவைத்த எரிபொருள் கிடைக்காது

கொழும்பு, ஜனவரி 7

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கெனக் கொண்டுவரப்பட்டு, வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்ட ஐயாயிரம் லீற்றர் எரிபொருளும் பிரஸ்தாப சபைக்கு இப்போதைக்குக் கிடைக்காது.

அதனை இங்கு கொண்டுவர எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

யாழ் குடாநாட்டு பஸ் சேவைகள் நடத்துவதற்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும்முயற்சிதோல்வியில் முடிந்து விட்டது. எரிபொருள்தடை நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து யாழ் கோண்டாவில் டிப்போவுக்கு வந்து கொண்டிருந்த 5000 லீற்றர் எரிபொருள் ஆயுதப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

அந்த எரிபொருளையும் குடாநாட்டில் பஸ்போக்குவரத்துக்கு தேவையான எரிபொருளையும் அனுப்பிவைக்கும்படி திரு. கனகரத்தினம் போக்குவரத்து அமைச்சர் முகம்மதைச்சந்தித்து

(4ம் பக்கம் பார்க்க)

## சனி, ஞாயிறில் மின்சாரத் தடை

### தற்காலிகத் திருத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 7

எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான மின்சார விநியோகம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை தடைப்படும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.

அனுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும் அதிசக்தி மின் மார்க்கத்தில் முறிகண்டியில் சேதமடைந்த இரண்டு "பைலன்களும்" அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாலே தான் இத்தடை என்று தெரிகிறது

எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் திருத்த வேலைகள் தற்காலிகமானவையே என்றும் பூரணமாகத் திருத்துவதற்கு மேலும் சில தினங்கள் எடுக்கும் என்றும் அப்போது நடைமுறைப்படுத்தப்படும் மின்தடை பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் மின்சார சபை வட்டாரங்களில் இருந்துதெரியவருகிறது. (அ-எ)

## கோட்டையில் இருந்து துப்பாக்கிச்சூடு

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ் கோட்டை முகாமில் இருந்து அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்படுகின்றன.

நேற்றும் இதேபோல் மாலை 5-45 மணி அளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டன. (இ-10)

முச்சந்தி முனி



கல்வி அமைச்சும், அதிகாரிகளும் உந்த மாற்றங்களை திடுதிப்பெனச் செய்து பெற்றாரை உப்பிடி அந்தரத்திலை விட வேணுமே... போதிய அவகாசம் குடுத்து ஆற அமரச் செய்ய முடியாதே!

## தமிழ்பகுதியிலும் பிரதேச சபை தேர்தல்

கொழும்பு ஜன. 7

பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் நடத்தவே அரசு விரும்புகிறது தேர்தல்களை நடத்தக்கூடிய சூழ்நிலை அங்கு நிலவுவதாக தேர்தல் ஆணையாளர் கருதும்போது தேர்தல்கள் நடத்தப்படும்

ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று அரசாங்க நாடாளுமன்றக் குழுக்

4-ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கி ஊழியர்கள் வெளிநடப்பு

யாழ்ப்பாணம், ஜன 7

யாழ் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி ஊழியர்கள் நேற்று ஒருமணி நேரம் வெளிநடப்புச் செய்தனர்.

வங்கி முகாமையாளர் வெளியார் ஒருவரினால் தாக்கப்பட்டதை அடுத்தே ஊழியர்கள் இந் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

ஸ்ரான்லி வீதியில் உள்ள இலங்கை வங்கி உள்ள கிளையிலும் அலுவல்கள் தாமதித்தே தொடங்கப்பட்டன.

வங்கி ஊழியர்கள் சம்பந்தப்பட்டவரைப் பிடித்து போராளிகளி

(4ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் சூட்டு 2 தமிழர் பலி

## தலவாக்கலையில்

### தொழிற் சங்கப் பிரமுகர் காணமற் போனதால் வன்செயல்

கொழும்பு, ஜனவரி 7

தலவாக்கலையில் கடந்த திங்கள் மாலை ஆர்ப்பாட்டம் செய்த தமிழ்த் தோட்டத் தொழிலாளர் மீது பொலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

அப்போது இரண்டு தமிழ் தோட்டத் தொழிலாளர் உயிரிழந்தனர் 18 பேர் காயமடைந்தனர்.

இவர்களில் படுகாயமடைந்த 3 தொழிலாளர்கள் நுவரெலியாஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

தொழிற் சங்கப் பிரமுகர் சேசையா காணமற் போன சம்பவம்தொடர்பாகஆத்திரமுற்றதோட்டத் தொழிலாளர் திங்கள் மாலை தேயிலை ஆராய்ச்சி நிலைய விடுதிகளைத் தாக்கி தீவைத்தனர்.

அதைத் தொடர்ந்தே பொலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

தோட்டத்தொழிலாளரின் ஆர்ப்பாட்டத்தின் போது சிங்களவருக்குச் சொந்தமான 3 வீடுகள் 3 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன.

தேயிலை ஆராய்ச்சி நிலையத்துக்குச் சொந்த

(4-ம்பக்கம் பார்க்க)

## 9 தோட்டங்களில் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 7

துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு தமிழ் தோட்டத் தொழிலாளர் உயிரிழந்ததைத் தொடர்ந்து தலவாக்கலைப் பகுதியில் உள்ள 9 தோட்டங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரம் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் நேற்றுத் தொடக்கம் வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

இதனால் தலவாக்கலைப் பகுதியில் பதற்றம் நிலவுகின்றது.

தலவாக்கலை--நுவரெலியா போக்குவரத்துச்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## போலி பாஸ்போர்ட்: கனடாசென்றநால்வர் திருப்பி அனுப்பப்பட்டனர்!

கொழும்பு, ஜன.7

போலிப்பாஸ் போர்ட்டுடன் சிங்கப்பூரில் இருந்து கனடா சென்ற நான்கு இலங்கைத் தமிழர் கனடாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

முதலில் சிங்கப்பூருக்கு அவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

பின்னர் சிங்கப்பூரில் இருந்து கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

நேற்று கொழும்பு வந்திறங்கிய நான்கு இலங்கைத் தமிழரும் இரகசிய பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நால்வரும் இப்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## யாழ் நகரில் ஹெலி திடீர் சூடு!

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ். நகர்ப் பகுதியில் நேற்று ஹெலிக் கொப்டர் ஒன்று திடீர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

நேற்றுப் பகல் ஒரு மணி அளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

பலாலிப் பக்கமாக இருந்து வந்த ஹெலிக்கொப்டர் இரண்டு மூன்று முறை யாழ். நகரை வட்டமிட்ட பின் திடீரென பதிந்தும், சரிந்தும் சென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

விடுதலைப் புலிகள் திருப்பித் தாக்கியதை அடுத்து ஹெலிக்கொப்டர் மீண்டும் மேலெழுந்து சென்றது. (இ-10)

## விஞ்ஞான பீட தலைவர் ராஜினுமா இல்லை

யாழ்ப்பாணம் ஜன. 7

யாழ் பல்கலைக் கழக விஞ்ஞானபீடத் தலைவர் தமதுநிர்வாகப் பதவியை இராஜினாமாச் செய்யவில்லை.

ஏற்கனவே கலைப்பீடம் மருத்துவபீடம் ஆகிய வற்றைச் சேர்ந்த பல பேராசிரியர்கள் தமது நிர்வாகப்பதவிகளை இராஜினாமாச் செய்தது தெரிந்ததே.

விஞ்ஞான பீடத்துறையைச் சேர்ந்த ஏனையோர் பெப்ரவரிமூன்றும்திகதிக்குப் பின்னரே இது சம்பந்தமாக முடிவு எடுப்பதாக தீர்மானித்துள்ளனர்.

நேற்று விரிவுரைகள் வழமைபோல்நடைபெற்றன.

(3-ம் பக்கமும் பார்க்க)

(இ-10)

# அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது

## சபையில் அநுரா உரை

கொழும்பு ஜன. 7

நாட்டின் சுதந்திரத்துக்கும் இறைமைக்கும் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது இதைச்சமாளிக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா நேற்றுநாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடபகுதியில்சமாந்தர சிவில் நிர்வாகத்தை புலிகள் இயக்கம் நடத்துவது ஆத்திரமூட்டும் செயலாகும்.

வடபகுதி நிலைமை குறித்து நாடாளுமன்றத்தில் முழு அளவிலான விவாதம் நடத்தப்பட வேண்டும் இது சம்பந்தமான பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கஇருக்கிறேன்.

இப்படி திரு அனுரா பண்டாரநயக்கா தெரிவித்தார். (இ-எ)

## மன்னாரில்பெர்மிட்

யாழ்ப்பாணம், ஜன. 7

மன்னார் மாவட்டத்தில் நேற்று முதல் பெர்மிட் அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வாகனத்தும் 10 லீற்றர் எரிபொருள் வழங்கப்படுகிறது. (இ-10)

## ஆபத்தை முறியடிக்க ஒன்று படுவோம்

### அத்துலத் அழைக்கிறார்

கொழும்பு, ஜன. 7

வழமைக்கு மாறான பாரதூரமான ஆபத்து நாட்டுக்கு இன்று ஏற்பட்டுள்ளது. இந்த ஆபத்தை எதிர்நோக்கி வெற்றிகரமாக முறியடிக்க மக்கள் அனைவரும் கட்சி பேதமின்றி அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நாடாளுமன்றத்தில் நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயேஅமைச்சர் இப்படித் தெரிவித்தார்.

அமைச்சர் அத்துலத் முதலி மேலும் சொன்னதாவது: அரசாங்கம் சமாதான அரசியல் தீர்வு ஒன்றைக் காணவே விரும்புகிறது. ஆனால் தீவிரவாதிகள் வன்செயல்களில்தான் நாட்டம் கொண்டுள்ளனர்.

வடபகுதியில் இடம்

(4-ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

7-01-9871
புதன்கிழமை

சுபநேரம்:
5 02 முதல் 6 32 வரை
ராகுகாலம்:
12.32 முதல் 2.02 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## தமிழ் மக்களை ஒடுக்க எரிபொருளை அரசு ஆயுதமாகப் பயன்படுகிறது

### இந்தியத்தூதரகத்துக்குகடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 7

தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு ஸ்ரீலங்கா அரசானது எரிபொருளை ஓர் ஆயுதமாகவே பாவிக்கின்றது.

இவ்வாறு யாழ் வர்த்தகர் சங்கம் இந்திய தூதரகத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

அக் கடிதம் வருமாறு: இலங்கை அரசு வட பகுதிக்கான எரிபொருளைத் தடுத்த செயலானது ஒரு திட்டமிட்ட ஒடுக்கு முறை ஆகும்.

இதனால் யாழ் வர்த்தகர்களாகிய நாம் பெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் புதிய கட்சி உதயம்

புதுடில்லி, ஜன. 6

முன்னாள் நிதி அமைச்சர் திரு பிரணாப்முகர்ஜி புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்திருக்கிறார் கட்சியின்அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றது.

தேசிய சோஸலிஸ்ட் காங்கிரஸ் என இக் கட்சிக்குப் பெயரிடப்பட்டுள்ளது. (ஒ-எ)

### பிரபல பாடசாலைகளில்

# 5 ஆம் வகுப்பில் மாணவரை சேர்க்க பெற்றோர் பெரும் அவதி

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் 5 ஆம் வகுப்பில் (6ஆம் ஆண்டு) மாணவர்களைச் சேர்ப்பதற்கு பெற்றோர் அவதிப்படுகிறார்கள்.

அரசின் புதிய பாடவிதானங்களின், கல்வித் திட்டத்தால் இவ்வருடம் பல பாடசாலைகளில் 5ஆம் வகுப்பு நிறுத்தப்பட்டு புதிதாக 5ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்படுகின்றது.

பல பெற்றோருக்கு இது தொடர்பாக எதுவும் தெரியாது. பாடசாலை நேற்று முன்தினம் ஆரம்பமான போதே ஐந்தாம் வகுப்பு நிறுத்தப்பட்டது தெரிய வந்தது.

இதனால் தமது பிள்ளைகளை புதிய பாடசாலைகளில் சேர்க்க கால அவகாசமின்றிப் பெற்றோர்கள் அவதிப்படுகின்றனர்.

இது தொடர்பாக யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் தெரிவித்ததாவது:—

அரசின் இவ்வருட புதிய கல்வித் திட்டத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு வார்த்தை ஸ்தம்பிதம் அடைய இலங்கை அரசே காரணம்

### அன்ரன் பாலசிங்கம் கூறுகிறார்

சென்னை ஜன 6

கிழக்கு மாகாணத்தில் இருந்து சிங்களப் பகுதிகளை நீக்குவது என்ற தனது யோசனையில் இருந்த இலங்கை அரசு விலகிக்கொண்டுவிட்டது

இதனாலேயே பேச்சுக்கள் ஸ்தம்பித்துள்ளன என்று விடுதலைப்புலிகள் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

தமிழகத்தில் நடந்த சமயம் இடம் பெற்று வரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் இலங்கைக்கு தொடர்பு உண்டு என்றும் டாக்டர் பாலசிங்கம் செய்தியாளரிடம் சொன்னார்.

'எனது வீட்டுக்கு குண்டு வைத்தவர்களும் அவர்களே' என்றும் டாக்டர் பாலசிங்கம் சொன்னார். (இ-ஐ-எ)

### யாழ்ப்பாணத்துக்கு

## 12 லொறிகளில் வந்த எரிபொருள்களை திரும்பப்பெற கூட்டுத்தாபனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்ட எரிபொருளை வவுனியாவில் வைத்து திரும்பப்பெறுவதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமையலுவலகம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

எரிபொருள் தடை விதிக்கப்படுவதற்கு முன்னர் 12 லொறிகளில் எரிபொருள் நிரப்பப்பட்டு லொறிகள் வவுனியா வரை கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

எனினும் அரசின் திடீர் உத்தரவை அடுத்து லொறிகள் வவுனியா பொலீஸ் நிலைய வளவினுள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுச் செயலாளர் டாக்டர் ஈ எஸ்.பரராஜசிங்கம் வவுனியா ஏ. எஸ். பி. சமரக்கோனிடம் முறையிட்டார். இதனை அடுத்தே எரிபொருள்களை மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது

இதற்குரிய பணத்தை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திருப்பிக் கொடுக்கும்:

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான எரிபொருளும் 5 தனியார்த்துறையினருக்கு சொந்தமான எரிபொருளும் இந்த லொறிகளும் உள்ளன. (இ-10)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ் சிறு விளம்பரங்கள்**

**தேவை**

அலுவலகப் பணியாளர் (Peon) தேவை. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விளம்பர எண்: 44, மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

இயந்திரஇயக்குநர்கள் தேவை. ஹைடில்பேர்க் (HEIDELBERG) அச்சு இயந்திரத்தில் கடமையாற்றிய அனுபவமுள்ளவராக இருக்க வேண்டும். விளம்பர எண்: 43. மே/பா உதயன். யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன. விளம்பரதாரர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

முல்லைத்தீவிலுள்ள திருமலை அகதிகளுக்கு

# நிறுத்தப்பட்ட உதவிகளை மீண்டும் வழங்க உதவுக

## தொண்டமானுக்கு வேண்டுகோள்

முள்ளியவளை, ஜன. 7

நிறுத்தப்பட்ட நிவாரண உதவிகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் தஞ்சமடைந்த திருகோணமலை அகதிகளுக்கு மீண்டும் பெற்றுக் கொடுக்கும்படி திருகோணமலை இடம் பெயர்ந்தோர் ஐக்கிய சங்கம் அமைச்சர் தொண்டமானுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த 8,530 குடும்பங்கள் முல்லைத்தீவில் தஞ்சமடைந்துள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ, ஊர்காவல்படைகளின் முற்றுகையும் கொலை வெறியும் தொடர்ந்து நிலவுகின்றன. இந்த நிலையில் திருமலைக்கு மீண்டும் போகும்படி அகதிகளைக் கோருவது முறையல்ல.

இந்த அகதிகளை இராணுவ நடவடிக்கைகள் மூலம் திருமலைக்கு அனுப்பும் முயற்சிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.

நிறுத்தப்பட்ட அரச நிவாரண உதவியை மீண்டும் திருமலை அகதிகளுக்குப் பெற்றுக் கொடுத்து உதவுங்கள்.

இப்படி திருமலை இடம் பெயர்ந்தோர் ஐக்கிய சங்கம் அமைச்சர் தொண்டமானைக் கேட்டுள்ளது.

(இ-எ-93)

## எரிபொருள் பெர்மிட் முறைக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 7

கோட்டை முகாமில் பெர்மிட் வழங்கி காங்கேசன்துறை முகாமில் எரிபொருள் வழங்கும் திட்டத்துக்கு கோட்டை பலாலி முகாம் உயர் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள போதிய பாதுகாப்புக்களைத் தங்களால் வழங்க முடியாது என்பதே அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததற்கான காரணமாகும் என்று தெரியவருகிறது. திங்களன்று நடந்ததேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் கோட்டை, பலாலி அதிகாரிகள் எதிர்ப்புக்கான தங்கள் காரணங்களைத் தெரிவித்தனர் என்று தெரிய வருகிறது.

இதனைத் தொடர்ந்து பெர்மிட்டுக்கு எரிபொருள் வழங்கும் திட்டம்பற்றி தேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டதில் எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை

கூட்டத்துக்கு தலைமை வகித்த அமைச்சர் அத்துலத்முதலி, பின்னர் ஜனாதிபதியைச் சந்தித்து நிலைமையைத் தெரிவித்தார் என்று கொழும்பு அரசு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

(இ-ஐ-எ)

## ஜனாதிபதிக்கு தந்தி

முள்ளியவளை, ஜன. 7

திருகோணமலையிலிருந்து இடம் பெயர்ந்த 12 ஆயிரம் பேரர் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1.10.86 தொடக்கம் நிவாரணமின்றி பட்டினியால் வாடுகிறார்கள்.

திருகோணமலை இடம் பெயர்ந்தோர் ஐக்கிய சங்கச் செயலாளர் திரு வி எஸ். ராஜா இவ்வாறு ஜனாதிபதிக்குத் தந்தி அனுப்பியுள்ளார்.

(இ-93)

## கட்டுவன் மோதலில் போராளி மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 7

பலாலி இராணுவ முகாமில் இருந்து சட்டுவன் பகுதியை நோக்கி நடைபவனி மேற்கொண்ட சிப்பாய்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர் திங்களன்று இச்சம்பவம் நடந்தது.

சிப்பாய்களுக்கு உதவியாக இரண்டு ஹெலிக்கொப்டர்கள் தாழப் பறந்து சாமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்தன.

ஆகாயத் தாக்குதலையும் தரைத் தாக்குதலையும் எதிர்த்து விடுதலைப் புலிகள் மூன்று மணி நேரம் சமர் நடத்தினர்.

இச் சமரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ராஜீ (சு. கிருஷ்ணகுமார், குரும்பசிட்டி) என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இடையில் அகப்பட்ட சில பொதுமக்களை சிப்பாய்கள் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர் என்று தெரிய வருகிறது.

புலிகளின் தாக்குதல் காரணமாக சிப்பாய்கள் தரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

(இ-10)

## “முஸ்லிம் சமுதாயம் சலுகைகளையே அனுபவிக்கிறது உரிமைகளை அல்ல”

அம்பாறை, ஜன. 7

இந்த நாட்டில் முஸ்லிம் சமுதாயம் வெறும் சலுகைகளையே அனுபவித்து வருகின்றது, உரிமைகளை அல்ல. இதனை அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மத்திய குழு உறுப்பினர் ஜனுப் எப். எம். எஸ். ஏ. அன்ஸார் மௌலானா மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த மருதமுனை மஃபூலியா தைக்கா முன்றலில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொள்கை விளக்கக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து அவர் உரையாற்றினார்.

ஜனுப் அன்ஸாரி மௌலானா தொடர்ந்து உரையாற்றுகையில் “நாம் சலுகைகளைக் கேட்கவில்லை, உரிமைகளையே கேட்கின்றோமென அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் தலைவர்கள் பொது மேடைகளில் பேசி வருகின்றனர்”

இவர்களின் கருத்துக்களிலிருந்து முஸ்லிம் சமுதாயம் வெறும் சலுகைகளையே அனுபவித்து வருகின்றது. உரிமைகளை அல்ல என்பது தெளிவாகின்றது.

ஒரு சமுதாயம் வெறும் சலுகைகளில் தங்கியிருக்க முடியாது. தனித்துவத்தைப் பேணவும் முடியாது. ஏனெனில் சலுகைகள் இலகுவாகப் பறிக்கப்படக் கூடியவை.

உரிமைகளைப் பெற்று வாழ்வதன் மூலமே ஓர் இனம் தமது தனித்துவத்தைப் பேண வேண்டும் என்றார்.

(இ-14)

## வவுனியாவில் விவசாயப் பயிற்சி நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜன. 7

வவுனியா மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் 3 மாத கால பொது விவசாயப் பயிற்சியை முடித்துக் கொள்வோரின் விவசாய பயிற்சி நிறைவு விழா நாளை வியாழக்கிழமை வவுனியா மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

கோவில்குளம், ஓமந்தை விவசாய போதனாசிரியர்கள் பிரிவுகளைச் சேர்ந்த 25 பெண்கள் பயிற்சியை நிறைவு செய்கிறார்கள்.

விழாவிற்கு பிரதம அதிதியாக திரு. கே சி. லோகேஸ்வரன் கலந்து கொள்வார்.

விழாவுக்கான ஒழுங்குகளை விவசாய அலுவலர் திரு எஸ். சுந்தரலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

விழாவில் தையல், கைப்பணிப் பொருள்களின் கண்காட்சியும், விவசாய அறிவுப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

(இ-5)

ஆரம்ப சுகாதார நிலையம்மூலம்

## 40 வீத நோயாளர் வைத்தியசாலை செல்வதை தடுக்கலாம்

அச்சுவேலி, ஜன.7

ஆரம்ப சுகாதார நிலையங்கள் நேர்த்தியாகச் செயற்படும் இடத்து 40 சதவீதமான நோயாளர்களை வைத்தியசாலைகளுக்கு செல்லாமல் தடுக்கலாம். இந்த பணியை மிகச்சிறப்பாக அச்சுவேலி— புத்தூர் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் செய்து வருவது பாராட்டத்தக்கது.

கோப்பாய் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். விஜயரத்தினம் இவ்வாறு கூறினார்.

அச்சுவேலி பிரதேச ஆரம்ப சுகாதார நிலைய ஒன்றியம் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுகாதார விழாவை அச்சுவேலி புனித திரேஸா மகளிர் வித்தியாலயத்தில் நடத்தியது

செல்வி கே கௌரி தலைமையில் நடைபெற்ற சுகாதார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு டாக்டர் விஜயரத்தினம் உரையாற்றினார்.

திரு. க. பேரின்பநாயகம், திரு. எஸ். தங்கராசா, திருமதி அரசிங்கம். திருமதி இராசமணி, செல்வி அ ஜெனிற்ரு, செல்வி ந நந்தினி ஆகியோரும் உரையாற்றினர். (இ-11)

**விளையாட்டரங்கு**

## நீர்வேலியில் சுற்றுப்போட்டி

நீர்வேலி, ஜன 7

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நீர்வேலிச் சந்திக்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் மின்னொளியில் கரபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை ஒவர்கேம் முறைப்படியும், செற்அப்கேம் முறைப்படியும் நடத்துகிறது.

ஓவர்கேம் முறையில் 35 கழகங்களும், செற் அப் கேம் முறையில் 13 கழகங்களும் பங்குபற்றுகின்றன.

இன்னும் பெண்களுக்கான வலைபந்தாட்டமும் 7 கழகங்களுக்கிடையில் நடைபெறுகின்றன.

மேலும், நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலடியில் உள்ள உடற்பயிற்சி மைதானத்தில் இன்று புதன்கிழமை முதல் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியும் நடைபெறவுள்ளது.

இப்போட்டி 11 வீரர்களைக் கொண்டதாகவும், 7 வீரர்களைக் கொண்டதாகவும் இரு பிரிவுகளாக நடத்தப்படும்

இவற்றில் முறையே 20 கழகங்களும், 10 கழகங்களும் பங்குபற்றுகின்றன.

இப்போட்டிகளின் சம்பியன் தெரிவு எதிர் வரும் 24 ஆம்திகதி நடைபெறும். (இ-110)

## கல்வி வாழ்நாள் முழுதும் கற்பதற்கு உரியது

### பல்கலைக்கழக பதிவாளர் உரை

யாழ்ப்பாணம், ஜன. 7

கல்வியானது வாழ்நாள் முழுவதும் கற்பதற்குரியது மக்கள் தாம் விரும்பும் புதிய துறைகளில் நாட்டம் செழுத்தவும், புதிய கண்டுபிடிப்புகளை அறியவும் கல்வியை வாழ்நாள் முழுக்க கற்கவேண்டும்,

யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. இ முருகையன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் பட்டப்படிப்புகள் கல்லூரியின் 10 வது ஆண்டு நிறைவு விழாவும், “தமிழ்த் தென்றல்” சஞ்சிகை வெளியீட்டு விழாவும் வெளிவாரி மாணவர் ஒன்றியத் தலைவர் திரு க வாமதேவன் தலைமையில் நடைபெற்றன.

விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் இன்றைய கல்வி போட்டியின் அடிப்படையில் உள்ளது. மற்றவரை அடக்கி தான் மட்டும் உயரவேண்டும் என்னும் சுயநல அடிப்படையில் உள்ளது என்றார்.

விழாவில் செல்வி, ப. வாசுகி வரவேற்புரையும், திரு. ந. சுகுணன் நன்றியுரையும் திரு. இ சத்தீஸ்வரன், திரு. வே. சிவயோகலிங்கம். திரு. எஸ். ரி. பி. இராஜேஸ்வரன். திரு. த விஜயஸ்ரீ திரு. எஸ். வேலும்மயிலும், திரு கு. கல்வளை சேயோன், திரு எஸ் நரேந்திரன் ஆகியோர் சிறப்புரைகளும் வழங்கினர்.

(இ-5)

## அதிபராக நியமிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.7

அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு புதிய அதிபராக தற்போதைய உப அதிபர் திரு. மூத்தசிவஞானத்தை நியமிக்கும்படி அச்சுவேலி மகாவித்தியாலய அபிவிருத்திச்சபை கல்விப் பணிப்பாளரை கேட்பதெனத் தீர்மானித்துள்ளது.

தற்போதைய அதிபர் திரு. எஸ். எஸ். துரைசிங்கம் இம்மாதம் 24 ஆம் திகதிமுதல் ஓய்வு பெறுகிறார்.

மேலும் வேறு பாடசாலைகளிலிருந்து எவரையும் இப்பாடசாலைக்கு அதிபராக மாற்றக் கூடாது என்று கல்விப் பணிப்பாளரை கோரும் தீர்மானமும் அபிவிருத்திச்சபையால் நிறைவேற்றப்பட்டது. (இ-5)

**பிறந்தநாள் வாழ்த்து**

சண்முகநாதன் நிர்மலாதேவி அவர்களின் செல்வப் புதல்வி செல்வி நீரஜா 7-1-87 தனது 1வது பிறந்த நாளை கோப்பாயில் கொண்டாடுகிறார். இவரை பாரிஸிலுள்ள அப்பா, அம்மா உற்றார், உறவினர், நண்பர்கள் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## மனித வாழ்வில் முக்கியமானது இளமைக் காலம்

### சிறுவர் சமயபாடசாலை விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 7

மனித வாழ்வில் மிக முக்கியமானது இளமைக் காலமாகும். அக்காலத்தில் தான் ஒருவரின் தோற்றமும் நடத்தையும் உருவாகின்றன. இப்பணியில் சிறுவர் பாடசாலைகள் முக்கிய இடம் பெறுகின்றன.

இப்படி சிவானந்த சிறுவர் சமய பாடசாலைப் பொறுப்பாளர் திருமதி சூரசங்காரம் தெரிவித்தார்.

சுவாமி சிவானந்தரின் பிரதம சீடரும் தற்போது அமெரிக்காவில் உலக பூரணயோக சமாஜங்களின் தலைவருமான யோகிராஜ் சச்சிதானந்தாவின் 72 ஆவது பிறந்ததின விழாவும் சிறுவர் சமய பாடசாலையின் ஆண்டு விழாவும் அண்மையில் இடம் பெற்றன.

திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மாதர் சங்க உபதலைவி திருமதி ஜெகநாதன் தலைமை வகித்தார்.

திருமதி சூரசங்காரம் மேலும் பேசுகையில், குழந்தைகள் நல்ல சூழ்நிலையில் வளர வேண்டும். நல்ல சூழ்நிலையில் வளர முடியாத குழந்தைகளை பிற்காலத்தில் நல்ல பிரஜைகளாக்க முடியாது” என்று சொன்னார்.

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் பேசுகையில், யோகிராஜ் சச்சிதானந்தாவின் பிறந்த தினத்தைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாட வேண்டும் என்று விண்ணப்பித்தார்.

சட்டத்தரணி திரு எஸ். கனகரத்தினம், சிவதர்ம வள்ளல் திரு. கனகராஜா ஆகியோரும் பேசினர்.

திரு கனகராஜா பரிசுகளை சிறுவர், சிறுமியருக்கு வழங்கினார். பின்னர் அன்னதானமும் நடந்தது. (இ-எ)

காரைதீவில்

## இயக்க மோதலில் பொதுமக்கள் காயம்

கல்முனை, ஜன 7

திங்களன்று காரைதீவில் இடம்பெற்ற இயக்க மோதலில் சில பொது மக்கள் காயம் அடைந்தனர்.

ஈ பி ஆர் எல். எப் - விடுதலைப்புலிகள்இயக்கங்களுக்கு இடையேயான மோதலின்போது, காரைதீவு முகாம் ஒன்றில் இருந்து ... குண்டு, வீடு ஒன்றில் ... பிரயோகத்தில் ... காயம் அடைந்தனர்.

கந்தையா சந்திரமோகன் (5 வயது) கந்தையா செல்வராசா (10வயது), கந்தையா புஷ்பமலர் (17 வயது) ஆகிய சகோதர, சகோதரிகளே காயமடைந்தவர்கள் ஆவர்.

முதலில் கல்முனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர்கள், அவசர சத்திரசிகிச்சைக்காக பின்னர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டனர். (இ-84)

## ரூ. 1 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன 7

அச்சுவேலியில் இளைஞர்சேவை மன்றத்தினரால் நடத்தப்படும் மாடு, தென்னங்கன்று, தோடை வளர்ப்புத் திட்டத்தின் தொடர்ச்சியான வேலைகளுக்காக 1 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்மாவட்ட அபிவிருத்திச் சபை நிதி ஒதுக்கீட்டிலிருந்து இந்நிதியை அரச அதிபர் ஒதுக்கியுள்ளார் என மாவட்ட அபிவிருத்திச் சபை கணக்காளர் திரு. கே. எம். இராஜேந்திரன் தெரிவித்தார். (இ-5)

## பாடசாலைகளில் 2 நேர வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ்மாவட்டப் பாடசாலைகள் பல இந்த வருடம் முதல் மீண்டும் இருநேர வகுப்புக்களை நடத்துகின்றன.

கடந்த மூன்று வருடங்களாக சகல பாடசாலைகளிலும் ஒரு நேர வகுப்பே நடைபெற்று வந்தது.

சகல பாடசாலைகளிலும் இவ்வாண்டு முதல் 6 மணிநேர பாடவகுப்புக்கள் நடைபெற வேண்டும் என கல்வித் திணைக்களம் பணித்துள்ளதைத் தொடர்ந்தே பல பாடசாலைகள் இருநேர வகுப்புக்களை ஆரம்பித்துள்ளன. (இ-5)

**மின் தடை**

இலங்கை மின்சார சபையின்

**முக்கிய அறிவித்தல்**

அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வரும் அதிசக்திவாய்ந்த மின் மார்க்கத்தில் (132000 Volts Transmission Line) அவசர திருத்தவேலைகள் செய்ய வேண்டியிருப்பதனால் 87-01-10 ந் திகதியும் (சனிக்கிழமை) 87-01-11ந் திகதி (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரு நாட்களும் காலை 7-00 மணியிலிருந்து மாலை 5-00 மணிவரை யாழ்ப்பாணம் - கிளிநொச்சி ஆகிய இரு மின் பொறியியலாளர்களின் அதிகாரத்துக்குட்பட்ட சகல பகுதிகளுக்கும் மின்தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம்மின்தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோருக்கும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது

இப்படிக்கு

மின்பொறியியலாளர், யாழ்-பிரதேச அலுவலகம், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்.

வெளிநாடு செல்லும் பிரயாணிகளின் முக்கிய கவனத்திற்கு

உங்கள் பிரயாணம் எங்களால் நிச்சயிக்கப் படுகின்றதா என்பதை நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

✱ கனடா ✱ பிரான்ஸ்
✱ ஜெர்மனி ✱ நோர்வே

ஆகிய நாடுகளுக்கான உங்கள் பிரயாணம் எமது காரியாலயத்தில் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றது.

தனிப்பட்ட நபரோ அன்றி வேறு நிறுவன முகவர்களோ எம்மால் நியமிக்கப்படவில்லை.

நீங்கள் எம்முடன் நேரிலேயே தொடர்புகொள்ளுங்கள்.

உங்கள் வெளிநாட்டுப் பயணத்தை நிறைவேற்றக் காத்திருக்கிறோம்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

நோர்வே செல்பவர்களுக்கு இலவச பொண்ட் செய்து தரப்படும்.

எமக்கு வேறு கிளைகள் கிடையாது!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

— ஆறுமுகநாவலர்,

உதயன்
உண்மை - விழிப்பு - ஒரு ...
இல,15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 07-01-1987 த. பெ இல 23

## லலித்திற்கு முழு அதிகாரம் முன்னோடியா ..........?

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்புச் சம்பந்தமான முழுப் பொறுப்பும் அமைச்சர் அத்துலத்திடம் அளிக்கப்பட்டிருக்கிறது

அவர் ஏற்கனவே தேசிய பாதுகாப்பு மந்திரியாக இருக்கிறார் பிரதிப் பாதுகாப்பு மந்திரியும் அவர்தான் இந்த இரு பதவிகளாலும் கிடைக்கும் அதிகாரங்கள் போதாது என்பதாலேயே வடக்கு, கிழக்கின் முழுப்பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கலாம்.

இது வடக்கு, கிழக்கில் பெரும் இராணுவ அட்டூழியங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கான முன்னேற்பாடோ என்று ஊகிக்க வேண்டி உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை கையேற்றுள்ளது குறித்து அமைச்சர் அத்துலத் வெளியிட்ட கருத்துக்கள் மேற்சொன்ன ஊகத்துக்கு மையப் புள்ளிகளாக அமைகின்றன.

புலிகளின் இந்தச் செயல் குறித்து அரசு கடும் நடவடிக்கை எடுக்கும். அந்தக் கடும் நடவடிக்கை எப்படியாக இருக்கும் என்பதை நான் இப்போது சொல்ல மாட்டேன்—

யாழ். நகரை மீண்டும் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஒரேயொரு மாற்று நடவடிக்கை தான் உண்டு —

யாழ். நகரில் உள்ள ஒரு லட்சத்து 13 ஆயிரம் மக்களையும் நகரிலிருந்து வெளியேற்றுவதே அந்த மாற்று நடவடிக்கையாகும் —

வடபகுதி மீது இப்போது எரிபொருள் தடை விதித்துள்ளோம். மின்சாரத் தடையையும் எம்மால் விதிக்க முடியும். உணவுப் பொருள் விநியோகத்தையும் எம்மால் தடுக்க முடியும்— இவ்வாறு எல்லாம் அமைச்சர் வீம்பு பேசியுள்ளார்.

தமிழ் மக்களை இராணுவ அட்டூழியத்தால் அல்லற்படுத்தியது போதாது என்று, பொருளாதாரத் தடைகளாலும் துன்புறுத்த அரசாங்கம் தொடங்கி விட்டது. ஆகையால் அத்துலத் கூறும் மின்சாரத்தடை, உணவுத் தடை என்பன அடுத்தடுத்த நடவடிக்கைகளாக இருக்கலாம்.

இராணுவத் தாக்குதல்களை நடத்தி அப்பாவித் தமிழர்களைக் கொன்று விட்டுப் பயங்கரவாதிகள் என்று கணக்குக் காட்டும் 'கெட்டித்தனத்தை' கண்டுபிடித்தவர் அவர்!

அதே போல போராளிகளின் சிவில் நிர்வாகத் திட்டத்தை நசுக்குவதாகக் கூறி இயன்றவரையான ஆகக் கூடுதல் பரிமாணமுள்ள பொருளாதாரத் தடைகளை— நிர்ப்பந்தங்களைக் கொண்டு வர அவர் பின்னிற்க மாட்டார்.

தமிழ் மக்கள் மீது ஏதோ அன்பும், கருணையும் கொண்டவர் போல, அவர் "மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் நாம் அதைச் செய்யவில்லை இதைச் செய்யவில்லை" என்று கூறிவந்தார். அவ்வாறே அவரது இராணுவ உயர் அதிகாரிகளும் கூறிவந்தார்கள்.

இப்போது யாழ். நகர மக்களை வெளியேற்றி மாற்று நடவடிக்கை எடுப்பது குறித்துப் பேசுகிறார்.

இராணுவ நடவடிக்கை சரியான பயனைத் தராமையால் பொருளாதாரத் தடையில் கை வைத்திருக்கிறார். அதுவும் தோற்றால் இரண்டையும் ஒரே நேரத்தில் செய்து 'வெற்றி கொள்ளவும்' திட்டமிடலாம்.

பொருளாதாரத் தடைகள் மூலம் அரசு வெற்றி கொள்வதனைத் தடுப்பது முழுக்க முழுக்க மக்களிலேயே தங்கி உள்ளது. அதற்கான மனத்தைரியத்தையும், மாற்று வழிகளையும் கைக்கொண்டு தாக்குப் பிடிக்க வேண்டியதன் அவசியத்தை ஏற்கனவே இப்பத்திகளில் தெரிவித்து விட்டோம்.

அப்பாவித் தமிழ் மக்கள் நலன் கருதியே பெரிய அளவில் இராணுவத் தாக்குதல் நடத்தவில்லை என்று இதுவரை கூறிவந்தவர், அவர்கள் நலன்களைச் சிறிதும் பாராமல், அவர்களை யாழ் நகரை விட்டு வெளியேற்ற முனைகிறார்.

அமைச்சரது அந்தத் திட்டத்தை முறியடிப்பது, தோல்வி அடையச் செய்வது யாழ் நகர மக்களையே சார்ந்தது. குடியிருப்புப் பகுதிகளில் ஷெல் தாக்குதல் தொடர்ந்து நடத்தி, மக்களைக் கட்டாயமாக வெளியேற்றவும் திட்டம் இருக்கும்.

ஆனால் நகர மக்கள் எக்கட்டத்திலும் நகர மறுத்தால் அவரது அந்தத் திட்டமும் வெற்றியளிக்காது போகும். தாக்குதல் ஆரம்பமாகும் இரண்டொரு நாட்களில் பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழக்கலாம். ஆனால் அதனைப் பொருட்படுத்தியதாகக் காட்டிக் கொள்ளாமல் மனத்துணிவுடன் நின்று பிடித்து, நகரத்தை விட்டு மக்கள் நகர மறுத்தால் திட்டம் நிச்சயம் தோல்வி அடையும்.

முதல் நாள் தாக்குதலிலேயே மக்கள் பயந்து வேறு இடங்களை நாடினால் அரசு தனது முயற்சியில் வெற்றிகாணும். யாழ்ப்பாண நகரமும் நாசமாகிவிடும்.

இச்சூழ்நிலையில் யாழ். நகர மக்கள் ஒவ்வொருவரும் மனத்துணிவை வளர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயமும், கடப்பாடும் எழுந்துள்ளன.

## ஈரான் குற்றச்சாட்டு

தெஹ்ரான், ஜன.6

ஈராக் ரசாயன குண்டுத்தாக்குதலை ஈரானின் குடியிருப்புப் பகுதிகளில் மேற்கொண்டுவருவதாக ஈரான் குற்றஞ்சாட்டியிருக்கிறது

இதுபற்றி நேரில் பார்த்து அறிந்து கொள்ள அவதானிகள் குழு ஒன்றை அனுப்பும்படி ஈரான் வெளிநாட்டமைச்சர், ஐ நா. பொதுச் செயலாளரைக் கோரியுள்ளார். (இ-எ)

## குண்டு வெடிப்பு காரணம் அல்ல

கன்ஜுவான், ஜன. 6

91 பேரைப் பலி கொண்ட ஹோட்டல் தீ விபத்துக்குக் குண்டு வெடிப்புக் காரணம் அல்ல என்று புவர்ட்டோ றிக்கோ கவர்னர் அறிவித்துள்ளார்.

தீப்பிடித்ததற்கான காரணத்தை அறிந்து கொள்ளும் விசாரணை தொடர்ந்துநடைபெறுவதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

பார்த்தசாரதி ராஜினாமாவைத் தொடர்ந்து

# இந்திய வெளியுறவு ஆலோசனைக் கமிட்டி கலைக்கப்பட்டது

புதுடில்லி, ஜன,6

வெளியுறவு ஆலோசனைக் கமிட்டியை இந்திய அரசு கலைத்து விட்டது.

கமிட்டித் தலைவராக திரு ஜி. பார்த்தசாரதி பணிபுரிந்து வந்தார்.

கடந்த மாதம் திரு. பார்த்தசாரதி திடீரென தலைமைப்பதவியை ராஜினாமாச் செய்தார்.

அதைத் தொடர்ந்து வெளியுறவு ஆலோசனைக் கமிட்டியையே இந்திய அரசு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கலைத்து விட்டது

இந்திய அரசுக்கு உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்பு குறித்து ஆலோசனை வழங்கவே பிரதமர் காந்தி இந்தக் கமிட்டியை அமைத்து இருந்தார்.

இக்கமிட்டியில் இந்திய உளவுப்படைப் பிரிவுத் தலைவர் உள்நாட்டு வெளிநாட்டு இணை அமைச்சர்கள் ஆகியோரும் அங்கம் வகித்தனர் (இ-ஐ-எ)

ஈரான் விவகாரம்:

## றேகன் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

வாஷிங்டன், ஜன 6

ஈரானுக்கு ஆயுதம் விற்றது சம்பந்தமான பூர்வாங்க விசாரணை பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிடும்படி அமெரிக்க அதிபர்றேகன் விடுத்த கோரிக்கையை அமெரிக்க செனட்டின் புலனாய்வுக் கமிட்டி நிராகரித்து விட்டது.

பூர்வாங்க விசாரணை சம்பந்தமான அறிக்கையை வெளியிடுவது, முழு அளவிலான விசாரணைக்கு உதவும் என்று அதிபர் றேகன் தனது கோரிக்கைக்குக் காரணம் காட்டியிருந்தார்.

பூர்வாங்க விசாரணை இன்னும் முடியவில்லை என்று ஜனநாயகக்கட்சி செனட்டர் தெரிவித்தார். (இ-எ)

## காங்கிரஸிடம் வேண்டுகோள்

வாஷிங்டன், ஜன 6

நட்சத்திரப்போர் திட்டத்துக்கு 200 கோடி டாலர் அதிகமாக ஒதுக்கும்படி அமெரிக்க காங்கிரஸுக்கு. அதிபர் றேகன் வேண்டுகோள் விடுத்து இருக்கிறார். (இ-எ)

"நியூஸ்வீக்" குக்கு ஜே ஆர்.பேட்டி

## குற்றச்செயல் புரியும் தமிழ் அகதிகள் தமிழகத்தில்இல்லை என்பதை ராஜீவ் உறுதிப்படுத்த வேண்டும்

நியூயோர்க், ஜன. 7

இலங்கையில் குற்றச் செயல்கள் புரியும் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் இல்லை என்பதை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உறுதிப்படுத்த வேண்டும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இருந்து ஆயுதங்களை இலங்கைக்குக் கடத்துவதையும் தீவிரவாதிகள் வந்து போவதையும் பிரதமர் காந்தி தடைசெய்ய வேண்டும்.

இப்படிச் செய்வது குறித்து எங்களுக்குள் ஓர் இணக்கம் உண்டு என்றாலும் இந்தியா அதை பின் பற்றுகிறது இல்லையே!

வன்செயல்களை ஒழிக்க தீவிரவாதிகள் மீது இந்தியா கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால் இலங்கை நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படும்.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்த வழமைக்கு மாறான முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன] சொன்னார். (இ-ஐ-எ)

## லிபிய 'மிக் - 29' விமானம்சுடப்பட்டது

சாட், ஜனவரி. 6

லிபியாவுக்கு சொந்தமான "மிக் – 29" விமானம் ஒன்றை சுட்டுவீழ்த்தியதாக சாட் அரசாங்கம் அறிவித்தது.

லிபியா ஆதரவிலான கிளர்ச்சிக்காரர்களினால் கைப்பற்றப்பட்ட யூவா பிரதேசத்தை மீட்டுவிட்டதாகவும் சாட் அரசு அறிவித்தது. (இ-எ)

வளைகுடாவில்

## அமெரிக்க ஹெலி மீது ஏவுகணைத் தாக்குதல்

வாஷிங்டன், ஜன. 6

அமெரிக்கக் கடற்படை ஹெலிக்கொப்டரை நோக்கி வளைகுடாவில் வைத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சரக்குக் கப்பல் ஒன்றில் இருந்து நடத்தப்பட்ட இந்த ஏவுகணைத் தாக்குதலில் இருந்து ஹெலிக்கொப்டர் மயிரிழையில் தப்பியது.

ஹெலிக்கொப்டரில் இருந்து ஐநூறு யார் தொலைவில் ஏவுகணை சென்றது என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் ஹெலிக்கொப்டரில் மூன்று வீரர்கள் இருந்தனர்.

ஏவுகணைத் தாக்குதலை நடத்திய சரக்குக்கப்பல் அடையாளம் காணப்படவில்லை.

வளைகுடா பகுதியில் றோந்து புரியும் அமெரிக்கக் கடற்படை நாசகாரியைச் சேர்ந்தது இந்த ஹெலிக்கொப்டர். (இ-எ)

வெளி உலகில்

வாஜ்பாய் கூறுகிறார்

## அமெரிக்க ஆயுதங்களை இந்தியாவுக்கு எதிராகவே பாகிஸ்தான் பாவிக்கும்

புதுடில்லி, ஜன. 6

பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் அமெரிக்க ஆயுதங்கள் ஆப்கன் அல்லது ரஷ்யாவுக்கு எதிராகப் பாவிக்கப்படமாட்டா; இந்தியாவுக்கு எதிராகவே பாவிக்கப்படும்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவரான திரு. அடல் வாஜ்பாய் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ரஷ்யா, இந்தியாவின். நெருங்கிய நட்புநாடு. ஆகவே ஆப்கனில் இருந்து ரஷ்யத் துருப்புக்களை விலக்கிக் கொள்வதற்கு இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆப்கானிஸ்தான் பிரச்சினை காரணமாகத்தான் பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை வழங்குகின்றோம் என்ற காரணத்தை அமெரிக்கா தெரிவிக்க முடியாத நிலையை இதன் மூலம் நாம் ஏற்படுத்த முடியும்.

இப்படி திரு. வாஜ்பாய் தெரிவித்தார். (இ-எ)

## செய்திக்கொத்து

### கலைநகர் வீதி

வட்டுக்கோட்டை, ஜன7

சித்தன்கேணி கலைநகரிலுள்ள வீதிகளில் முட்செடிகள் பற்றையாக வளர்ந்திருப்பதனாலும் பீங்கான் துண்டுகள் அங்கும் இங்கும் போடப்பட்டிருப்பதாலும் பிரயாணிகள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமமடைந்து வருகின்றனர் (இ-161)

### குண்டசாலையிலிருந்து கோழிக்குஞ்சு

வேலணை, ஜன.7

வேலணை கால்நடை வளர்ப்போர் சங்கம் குண்டசாலையில் இருந்து கோழிக்குஞ்சுகளைப் பெற்று மக்களுக்கு வழங்க உள்ளது. (இ-167)

### கவிதைப் போட்டி முதல் பரிசு

யாழ்ப்பாணம், ஜன.7

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் நடத்திய கவிதைப் போட்டியில் அச்வாய் திரு. மு. மயில்வாசனம் முதல் பரிசைப் பெற்றார்.

சாவகச்சேரி அகிலா குணராஜா, வங்காலை அ. மன்னார்மணி ஆகியோரின் கவிதைகள் பாராட்டுப் பரிசில்களை பெற்றுள்ளன. (இ-5)

### தெல்லிப்பளையில் இலவச மருந்து

யாழ்ப்பாணம், ஜன.7

தெல்லிப்பளைப் பகுதியில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட தாய்மார், சிறுவர்களுக்கு மருந்து வகைகளை இலவசமாக வழங்க தெல்லிப்பளை சுகாதாரப் பகுதியின் சுகாதார அபிவிருத்திச்சபை முன்வந்துள்ளது

பிள்ளைகள் பாதுகாப்பு கழக யாழ் அலுவலக உதவியுடன், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடும்பநல சேவையாளர் ஊடாக இம்மருந்து வகைகள் வழங்கப்படவுள்ளன என சபைச் செயலாளர் திரு கி. இராமச்சந்திரன் தெரிவித்தார். (இ-5)

### வேலணை அகதிகளுக்கு இலவச மருந்து

மண்டைதீவு, ஜன. 7

வெளி மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வேலணைப் பகுதியில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகள் குடும்பங்களுக்கு இலவசமாக மருந்து வகைகளை வழங்குவதற்கு யாழ் கிறிஸ்தவ இளைஞர் கழகம் முன்வந்துள்ளது

இதன் அடிப்படையில் சுமார் ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுள்ள மருந்து வகைகளை வேலணை உ. அரசாங்க அதிபர் பிரிவு பிரசைகள் குழு, தனாதிகாரி திரு. சச்சிதானந்தவிடம் வழங்கியுள்ளது. (இ-88)

### பிரசைகள் குழு செயலாளர்

முள்ளியவளை, ஜன.7

முல்லைத்தீவு பிரசைகள் குழுச் செயலாளர் திரு. ச. முத்தையா ராஜினாமாச் செய்ததால் அந்த இடத்துக்கு புதுக்குடியிருப்பு பிரசைகள் குழு ஒன்றியத் தலைவர் திரு. நா. மகாலிங்கசிவம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (இ-93)

### இடமாற்றம்

கொடிகாமம், ஜன. 7

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. செ. மகேந்திரன் இப்பணிமனையில் 29 வருடங்கள் சேவையாற்றி யாழ் கல்வித் திணைக்களப் பகுதிக்கு மாற்றம் பெற்றுள்ளார். (இ-75)

### பருத்தித் துறையில் அரண் அமைக்க சிப்பாய்கள்முயற்சி

யாழ்ப்பாணம், ஜன.7

பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிப்பாய்கள் மெதடிஸ்த கல்லூரிப் பக்கமாக பாதுகாப்பு அரண் அமைக்க முற்பட்டபோது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றது. சிப்பாய்களும் பதில் தாக்குதல் நடத்தினராயினும், புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது முகாமுக்குத் திரும்பிச் சென்றனர். (இ-10)

### பஸ் கொள்ளை! மற்றும் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.7


நெடுங்கேணியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பஸ்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மேலும் ஒருவர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து சிறிதளவு நகைகளும் மீட்கப்பட்டன. பிடிபட்டவர் எண்ணிக்கை இத்துடன் நான்காக உயர்ந்துள்ளது. (இ-10)

### மீனவருக்கான உணவு முத்திரை

வேலணை, ஜன.7

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பத்து கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் மீனவ குடும்பங்களுக்கான உணவு முத்திரைகள் வழங்கும் வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (இ-167)



பொய்யாமொழி

குறள்:

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து.

பொருள்:

ஐயத்தில் இருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்க்கு அடைந்துள்ள இவ்வுலகைவிட அடையவேண்டிய மேலுலகம் அண்மையில் உள்ளதாகும்.

## யாழ். பேராசிரியர்கள் நிர்வாகப் பதவிகளைத் துறந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ் - பல்கலைக்கழக பேராசிரியர்கள் பலர் தமது நிர்வாகப் பதவிகளை திங்களன்று உத்தியோக பூர்வமாக ராஜினாமாச் செய்தனர்

சம்பள உயர்வுக் கோரிக்கையை வலியுறுத்தியே யாழ் பல்கலைக் கழக பேராசிரியர்கள் நிர்வாகப் பதவிகளைராஜினாமாச் செய்தனர்.

நிர்வாகப் பதவிகளை வகித்த மருத்துவ பீடத்தைச் சேர்ந்த யாவரும் தமதுபதவிகளைத் துறந்து விட்டனர்.

கலைப்பீடத்தைச் சேர்ந்த இருவரைத் தவிர ஏனைய 12 பேரும் தமது நிர்வாகப் பதவிகளை ராஜினாமாச் செய்து விட்டனர்.

இதேவேளை தெற்கே உள்ள பல்கலைக் கழகங்களின் சகல துறைத் தலைவர்களும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்து விட்டார்கள்.

## வாசகர் திருமுகம்

### அனுமதி இன்றி சம்பளத்தில் பணம் கழித்தல்

யாழ் கல்வித் திணைக்களத்தின்கீழ் கடமையாற்றும் ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து திடீர், திடீர் என அவர்களின் அனுமதியின்றிப் பணம் கழிக்கப்படுகின்றது.

உதாரணமாக இணுவில் சைவப் பிரகாச மகாவித்தியாலயத்தில் கடமையாற்றும் ஓர் ஆசிரியையிடமிருந்து இவ்வாண்டு ஏற்கனவே இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் அங்கத்துவப் பணம் என, பணம் கழிக்கப்பட்டிருந்தது.

அதற்கும் அவ்வாசிரியையின் சம்மத ஒப்பம் பெறப்படவில்லை.

மீண்டும் கடந்த நவம்பர் மாதச் சம்பளப் பட்டியலில் ரூபா 24/– கழிக்கப்பட்டது.

ஏன் எனக் கணக்குப் பகுதி விடய லிகிதரிடம் கேட்டபோது இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்திற்கென கணக்கியல் உதவியாளரின் உத்தரவின் பேரில் கழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கணக்கியல் உதவியாளரிடம் கேட்டபோது கல்விப் பணிப்பாளரின் உத்தரவின் பேரில் தான் கழிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேன்முறையீடு செய்தால் மீளளிக்கப்படும் என்று கூறப்பட்டது.

கல்வித் திணைக்களம் ஆசிரியர்களின் சம்மதமின்றி எத்தொழிற் சங்கத்திற்கும் பணம் கழிப்பதை நிறுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம் கி. தவராசா

### மந்துவிலில் ஐக்கிய நாணய சங்கம்

கொடிகாமம், ஜன. 7

ஐக்கிய நாணயச் சங்கங்களின் மூலம் அநேக நன்மைகளைப் பெறலாம். பல ஆக்க முயற்சிகளுக்குத் திட்டமிட்டு பொருளாதார விருத்தியை உண்டுபண்ணலாம்.

மந்துவிலில் ஸ்ரீ பாரதி ஐக்கிய நாணய சங்கத்தை அங்குரார்பணம் செய்து வைத்துப் பேசும் போது கூட்டுறவு உத்தியோகத்தர் திரு. பொ. சிவலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீ பாரதிவித்தியாலயத்தில் வைபவம் நடைபெற்றது. கிராம சேவை அலுவலர் திரு. வே, துரைசிங்கம் கலந்துகொண்டார். (இ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது!

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

* தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்

பெற்றுக்கொள்ளலாம்.

# உதயன்

07 01 1987 புதன்கிழமை

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/- மட்டுமே!
* Processing Free (நெகடிவ் செய்ய இலவசம்)
* வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

# சலுகைகள் எல்லாம் கொடுத்தாகி விட்டன

## இனிக் கொடுக்க எதுவுமே இல்லை

### நியூஸ் வீக்குக்கு ஜனாதிபதி பேட்டி

கொழும்பு, ஜன 7

பிரிவினை வாதிகளுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகள் எல்லாம் கொடுத்தாகி விட்டது. இனிக்கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லை.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா 'நியூஸ் வீக்' அமெரிக்கசஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

"இனப்பிரச்சினை யோசனைகளை பௌத்த மதகுருமார்கள் எதிர்க்கிறார்களே?--என்ற கேள்விக்கு ஜனாதிபதி பதிலளிக்கையில்,

"மதகுருமாரை, மதகுருமார்களாகவே நான் கணிக்கிறேன்; மதிக்கிறேன். வாக்காளர்களாக நான் அவர்களைக் கருதவில்லை. மதகுருமார்கள் மதம் சம்பந்தமான செயல்பாடுகளில்தான் ஈடுபடவேண்டும்"-- என்று சொன்னார்.

"பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுக்காண முயற்சித்து களைத்து விட்டேன்."

"தீவிரவாதப் பிரச்சினைக்கு ஆயுத பலத்தினால் தீர்வுகாணவேண்டும்; அல்லது அப்படியே விட்டுவிட வேண்டும் - என்றும் திரு. ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

"பிரிவினைவாதிகளுக்கு கொடுக்க வேண்டிய சலுகைகள் எல்லாம்கொடுத்தாகிவிட்டது. இனிக் கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லை. கடைசியாக சமர்ப்பித்த யோசனைகள் தோல்வி அடையுமானால் அரசியல் தீர்வுக்கு வேறு வழியே இல்லை"-- என்றும் ஜனாதிபதி கூறினார்

இலங்கைப் படைகள் அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் ஜனாதிபதி தமது பேட்டியில் ஒப்புக்கொண்டார்.

(இ-ஐ-எ)

## விக்தாரம்

வாரும் முரலியார்? ரவுண்பக்கம் போனீரோ! சனப் போக்குவரத்து நல்லாக் குறைஞ்சிட்டுது பாத்தியே. பஸ்கள் வான்கள் எல்லாம் மட்டுப்படுத்தப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட சேவையள் தான் நடக்குது.

காலையில சந்தோருக்கு வரயிக்கை கே. கே. எஸ். ரோட்டில ஒரு அருமையான காட்சி நல்ல காத்திரமான மாட்டுவண்டி. ஒற்றைத் திருக்கல்தான். குறைந்தது பத்துப்பேரா வது போகலாம் லொறிச் சில்லு போல பெரிய றப்பர் சில்லு. மாடும் சுமாரான வேகத்தில ஓடுது. எரிபொருள் தட்டுப்பாட்டைச் சமாளிக்க அருமையான மாற்று வசதி எண்டு யோசிச்சேன். முந்தி ஒருக்கா எரிபொருள் விலை ஏறின போது அரசாங்க அமைச்சர்கள் பெரிசாப் பேசின மாற்று வாகனம் அது தான். நல்ல ஞாபகம் இருக்குது. கைத்தொழில் அபிவிருத்திச்சபை பெரிய அளவில றப்பர் சில்லு பூட்டிய வண்டில்களை அறிமுகப்படுத்தப் போவதாக எல்லாம் சொல்லிச்சினம் அரசாங்கத்தின்ரை வேலை எண்டால் அது ஒவ்வொரு 'சீசன்' பிரசாரம் தானே! பிறகு என்ன நடந்திச்சுது எண்டு தெரியாது.

நிச்சயம் அந்த மாட்டு வண்டி எங்களுக்கு இப்ப தேவை. எரிபொருள் கிடைக்கிற காலத்தில கூட சிக்கனமான - குறுகிய தூரப் போக்குவரத்துக்கு அதைப் பாவிக்கலாம், றப்பர் சில்லு பூட்டிய வண்டிகளைத் தயாரிப்பதை ஒரு "கொமேர்ஸல்" கைத்தொழிலாக ஆரம்பிக்கலாம். ஒரு தொழிற்சாலையைப் போடலாம்.

இப்படிப் புதுக் கோணங்களில எங்கடை திறமைகளைப் பயன்படுத்த எங்கடை ஆக்கள் பின்னுக்கு நிக்கினமே... எங்கடை பிரதேசத்தை நாங்கள் தான் வளக்கவேணும் எண்ட எண்ணம் இன்னும் வருகுதில்லையே. அதாவது சுதேசியம் தேசாபிமானம் எண்ட சரக்குகள் எங்களிட்டை ரொம்பக் கம்மி!

காலையில ரோட்டால வரயிக்கை மனம் சந்தோஷப்பட்டுது! காரில ஓடினவை எல்லாம் சைக்கிள் ஓடுகினம். மோட்டார் சைக்கிள் ஓடினவை எல்லாம் பாதசாரியளா மாறிவிட்டினம். காலத்துக்கு ஏத்த மாதிரித் தங்களை வளைச்சுக் கொள்ளிற திறமை எங்கடை ஆக்களிட்டை இருக்கிறதே என்பதைக் கண்டு தான் அந்தச் சந்தோஷம்...!

* * *

நேற்றுப் பின்னேரம் அலுவலாய் ஒரு இடத்தை போனேன். தெரிஞ்சவரோடை கதைச்சுக் கொண்டிருந்தேன். அவரின் மகன் அடிக்கடி வந்து நச்சரித்துக் கொண்டிருந்தார்

என்ன விஷயமெண்டு அவரிட்டை மெதுவாய் கேட்டேன். சிநேகிதி ஒருவரின் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்குப் போகவேணும் எண்டு மகன் அடம்பிடிப்பதாகச் சொன்னார் அவர்.

அட அப்பா! இந்தக் காலத்திலை பாஷன் பிடிபட்டு எங்கடை சனம் தலைகீழா நிக்குதுகள். இப்ப 'பேர்த்டே பாட்டி' வீட்டுக்கு வீடு வாசற்படி அடுத்த வீட்டுக்காரர் செய்தவை; நாங்கள் செய்யாமல் இருக்கிறதே? இந்தப் போட்டியில 'பேர்த் பாட்டியள்'' சர்வசாதாரணமாய் விட்டுது.

எங்கடை காலத்தில "பேர்த்டே பாட்டி" எண்டால் பெரிய இடத்து டாப்பீகச் செலவு எண்டு தான் இருந்தது. இப்ப என்னடா எண்டால் அது சர்வசாதாரணம். வீண் காசுச் செலவு, இந்த இக்கட்டான காலத்திலையும் 'பாட்டியள்' பெருகி வருகுதே!

பிறந்த நாள் எண்டால் அண்டைக்குக் கோயிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை வைச்சு கடவுளிட்டை ஆசி கேட்டால் போதாதோ?

எங்கடை சனம் எப்ப திருந்தும்? எங்கடை பாரம்பரியங்கள், பழக்க வழக்கங்கள், ஒழுக்கங்களை ஒதுக்கிவிட்டு வேறை பக்கத்தாலை போகுதுகளே! கடவுளே இதுகளுக்கு இன உணர்வையும், மொழி உணர்வையும்' கலாசார பண்பாட்டு பழக்க வழக்க உணர்வுகளையும் எப்பிடித் தான் உண்டாக்கிறது...?!

கொண்டோடி

யுவதிகளுக்கு
தேசிய தொழிற் பயிற்சிச் சபையின் ஆதரவில்
மின்தறிப் பயிற்சிநெறி

(1) மின்தறியில் பயிற்சிபெற்று நிரந்தர வேலைவாய்ப்புப் பெற விரும்புகின்றவர்கள் 12-1-87 காலை 9-00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

(2) பயிற்சிபெறும் காலத்தில் தேசிய தொழிற்பயிற்சிச் சபையால் வழங்கப்படும் ஊதியத்துடன் எமது விசேட ஊக்குவிப்புச் சம்பளமும் வழங்கப்படும்.

(3) மேற்படி பயிற்சிநெறியில் திருமணமாகாதவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

சிமா சில்க் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23170

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டுத் திகதி 07 - 01 - 1987.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 N 86 தொலைபேசி. 24805, 22078

## தடுத்துவைத்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுத்தார்.

அந்த வேண்டுகோள் குறித்து தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று அமைச்சர் கைவிரித்து விட்டார் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன (ஆ-எ)

## ஆபத்து.-.

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பெறும் சம்பவங்களுக்கு ஏற்ப, அவற்றுக்குத் தொடர்பான முறையில் மேலும் பல நடவடிக்கைகளை அரசு எடுக்க உள்ளது.

அந்த நடவடிக்கைகள் எப்படியானவை என்பதை இப்போது சொல்ல முடியாது.

இப்போது எரிபொருள் தடை விதிக்கப்பட்டுள்ளது

இப்படி அவர் கூறினார். (இ-எ)

## 5ஆம் வகுப்பு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் யாழ் மாவட்டத்தில் 208 பாடசாலைகளில் மாற்றம் நிகழவுள்ளது.

பல ஆரம்ப பாடசாலைகளில் 5ஆம் வகுப்பு நிறுத்தப்படுகின்றது. பல் பாடசாலைகளில் 5ஆம் வகுப்பு புதிதாக சேர்க்கப்படுகின்றது.

18 ஆயிரம் மாணவர்கள் இவ்வருடம் புதிதாக 5ஆம் வகுப்பில் சேரவுள்ளனர்.

யாழ் கல்வி வட்டாரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மாணவர்கள் கஷ்டமின்றி ஓரளவு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆரம்பப் பாடசாலைகள் பலவற்றிலிருந்த 5ஆம் வகுப்புக்கள் அப்படியே புதிதாக ஆரம்பமான பாடசாலை வகுப்புக்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளன.

யாழ் சென் ஜோன் பொஸ்கோ, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைகளில் பயிலும் சுமார் 600மாணவர்கள் தமக்கு யாழ் நகரில் பிரபலமான யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, ஆகியவற்றில் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுக்கு இம் மாதம் 31ஆம் திகதி கல்வித் திணைக்களத்தால் ஓர் அனுமதிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது

இதில் சித்தியெய்தும் மாணவர்களுக்கு திறமை அடிப்படையில் இக் கல்லூரிகளில் அனுமதி வழங்கப்படும்.

இவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டையாளக் கார்ட்டை இவர்கள் விண்ணப்பித்த கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-5)

பலாலியில்

# சிப்பாய்கள் மீண்டும் வெளியேற முயன்றனர்

பலாலி ஜன. 7

நேற்று முன்தினம் திங்கள் இரவும் சிப்பாய்கள் பலாலி விமான நிலையத்தில் இருந்துவெளியே வர முயன்றனர்.

இதனை எதிர்த்து ஏற்கனவே தயார் நிலையில் இருந்த விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினர்.

வெளியே வர முயன்ற சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு திரும்பவும் பலாலி விமான நிலையம் ஊடாக முகாமுக்குச் சென்றனர்

சிப்பாய்கள் ஊர்மனைக்குள் புகக்கூடிய வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் பொதுமக்களால் அகழிகள் வெட்டப்பட்டுள்ளன பாருங்கற்களும், சழிவு இரும்புகளும் பழுதடைந்த வாகனங்களும் தடையாகப் போடப்பட்டுள்ளன.

நேற்று மிக நவீன ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகள் கட்டுவன் குரும்பசிட்டிப் பகுதிகளில் காவல் புரிந்தனர்.

கட்டுவன், வறுத்தலைவிளான், தெல்லிப்பளைப் பகுதிகளில் பல பாடசாலைகளில் மாணவர்கள் முற்றுகவருகை தரவில்லை

இப்பகுதிமக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். (இ-119)

## தமிழ் மக்களை - - -

(1-பக்கத் தொடர்ச்சி)

தும் பாதிப்படைந்துள்ளோம்.

எமது மக்களுக்கு அன்றாடம் பாவனைபொருள்களை வழங்க வேண்டிய இக்கட்டான பாரிய பொறுப்புடன் இன்று நாம் இருக்கிறோம்.

தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு ஸ்ரீலங்கா அரசானது எரிபொருளை ஒரு ஆயுதமாகவே பாவிக்கின்றது.

மோட்டார் வாகனப் போக்குவரத்தையே நம்பியுள்ள எமது வியாபாரம் எரிபொருள் இன்மையால் பெரிதும்பாதிப்படைந்துள்ளது.

மக்களின் அன்றாட அவசிய தேவைப் பொருளான எண்ணெய்யை வட பகுதிக்கு மட்டும் வழங்குவதை தடுப்பதன் மூலம் இப்பகுதி மக்களின் ஜீவாதார உரிமைகளையே பறித்துள்ளது.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## தமிழ்- - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் ஆர். பிரேமதாசா பேசுகையில் 250 உதவி அரச அதிபர் பிரிவுகளில் பிரதேச சபைகள் இயங்கும். விகிதாசார அடிப்படையில்தான் பிரதேச சபைத் தேர்தல்கள் இடம்பெறும் என்றார் (இ-எ)

# ஆயுதப் போராட்டமே பேச்சுவார்த்தைக்கு வழிவகுத்தது

## இந்த உண்மையை மறக்க முடியாது என்கிறது "எஸைட்" சஞ்சிகை

சென்னை ஜன 6

தமிழ்ப்போராளிகள் நடத்தும்ஆயுதப்போராட்டம் தான் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைபேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர நிர்ப்பந்தித்தது தீர்வு காணப்பட வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்த உண்மையை நாம்மறந்துவிடக்கூடாது

சென்னையில் இருந்து வெளிவரும் 'எஸைட்' என்னும் ஆங்கில வார சஞ்சிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் முன்கண்ட வாறு எழுதியுள்ளது. ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

தொடர்ந்து நடத்தப்படும் ஆயுதப்போராட்டம்தான் திரு.ஜெயவர்த்தனா பேச்சுவார்த்தைகளில் அக்கறை காட்ட வைத்து உள்ளது

ஆகவே போராளிகளிடமிருந்து ஆயுதப் போராட்டத்துக்கு தேவையானவற்றை பறிப்பது பிரதி பலன் எதையும் தரமாட்டாது

நியாயமான தீர்வு ஒன்றுக்கு போராளிகளைக் கொண்டு வரவேண்டும். அதற்கு போராளிகள் மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்கத்தான் வேண்டும். ஆனால் இந்த நிர்ப்பந்தம் இரகசியமானதாக அமையவேண்டும். தமிழீழப் போராளிகளிடம் இருந்து ஆயுதங்களைக் கைப்பற்றிய பொலீஸாரின் நடவடிக்கைக்கு யார் பொறுப்பு என்பது எமக்குத்தெரியவில்லை.

இந்தியாவின் உதவியின்றி தமிழ்ப்போராளிகள் ஆயுதப்போராட்டத்தை நடத்த முடியாது.

இப்படி 'எஸைட்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியுள்ளது. (இ-எ)

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் ஒப்படைத்தனர்.

முகாமையாளர் உட்பட அனைத்து ஊழியர்கள் முன்னிலையிலும் சம்பந்தப்பட்டவர் மன்னிப்புக் கோரியதை அடுத்து அவர் பின்பு விடுவிக்கப்பட்டார் வெளிநடப்பும் ஒருமணி நேரத்தில் கைவிடப்பட்டது. (இ-10)

## இலவச பாடநூல் விநியோகம்

பலாலி, ஜன. 7

காங்கேசன்துறை கல்வி வட்டாரத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் இன்று புதன்கிழமை 10 மணி முதல் இலவச பாடநூல்கள் வழங்கப்படுகின்றன.

இவ் வருடத்துக்கான புத்தகங்களில் 8-ஆம் ஆண்டுக்கான சமூகக் கல்வியின் முதலாம் பகுதியும் 10ஆம் ஆண்டுக்கான புத்தகமும் மட்டுமே வந்துள்ளன. (இ-119)

## ரஷ்ய வீரரை மீண்டும்பேச வைத்த கனவு

மாஸ்கோ, ஜன 6

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பங்குபற்றிய போது பேசும் சக்தியையும் கேட்கும் சக்தியையும் இழந்த ரஷ்ய வீரர் ஒருவர் மீண்டும் இச்சக்திகளைப்பெற்றுர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்க்கி மக்ஸிமென்கோ என்பது இவரின் பெயர்.

அண்மையில் இவர் ஒரு கனவுகண்டார்.

யுத்தமுனையில் நிற்பதாகவும் நாஸி பீரங்கி வண்டிகள் சிப்பாய்கள்சகிதம்தன்னை நோக்கி முன்னேறி வருவதாகவும் இவர் கனவு கண்டார்.

கனவில் கத்தியபடி எழுந்த அவர் மீண்டும் பேசும், கேட்கும் சத்தியைப் பெற்றார். (இ-எ)

## குண்டு வெடிப்புடன் தொடர்பு இல்லை என்கிறது தி. மு. க.

சென்னை, ஜன.6

தமிழ்நாட்டில் பரவலாக இடம்பெற்றுவரும் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் தொடர்பு எதுவும் இல்லை.

இப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் சபை தனது கூட்டத்தில் முடிவு செய்துள்ளது.

இதனை கழக நிர்வாகச் செயலாளர் சாதிக் பாட்சா அறிவித்தார்.

குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் தி மு க. வுக்கும் தொடர்புஉண்டு என்று கூறியதாக முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரனைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் தி.மு.க. பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதனிடையில் தி.மு.க. தலைவர் கருணாநிதியையும் தொண்டர்களையும் விடுவிக்க வேண்டும் என்று வலது கம்யூனிஸ்ட் தலைவர் எம். கல்யாணசுந்தரம் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளித்த முதல் அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

தி.மு.க. வுக்கும் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் தொடர்பு உண்டு என்று நான் அறிக்கை விடுத்த பின்பு திரு. கல்யாண சுந்தரம் இந்த அறிக்கையை விடுத்திருக்கிறார்.

குண்டு வெடிப்புச் சம்பவங்களை கண்டித்து திரு. கல்யாணசுந்தரம் அறிக்கை வெளியிடவில்லை.

"திரு. கருணாநிதிமீது நீதிமன்றத்தில வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவரை விடுதலை செய்வது என்பது அமைதிக்கு ஊறு விளைவிக்கும்"-- இப்படி முதலமைச்சர் தனது அறிக்கையில் கூறி இருக்கிறார்.

குண்டு வெடிப்புச்சம்பவங்கள் குறித்து விசாரணைநடத்தசுதந்திரவிசாரணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு ப. நெடுமாறன் தமிழக அரசைக் கேட்டுள்ளார்.

தி மு க தலைவர் கருணாநிதியையும் தொண்டர்களையும் விடுவிக்க வேண்டும் என்றும் திரு. நெடுமாறன் கோரியுள்ளார். (இ-எ)

## கிரிக்கெட்

புதுடில்லி ஜன. 6

காட்டாக்கில்இலங்கை இந்திய கோஷ்டிகளுக்கு இடையிலான 3ஆவது கிரிக்கெட் டெஸ்ட்டில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது

இலங்கை அணி தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸ் ஆடத் தொடங்கியது.

இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்று ஆடிக்கொண்டிருக்கின்றது. (இ-ஒ)

## பொலிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான வீடுகளுக்கும் தீவைக்கப்பட்டது.

தலவாக்கலைப் பகுதியில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (இ-ஐ-எ)

## சிங்கள குடும்பங்களுக்கு காணி

கொழும்பு, ஜன. 7

மூதூரில் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு அஞ்சி வெளியேறிய சிங்களக் குடும்பம் ஒன்றுக்கு குருநாகலில் குடியிருக்கக் காணி வழங்குவது என்று குருநாகல் மாநகர சபை தீர்மானித்தது.

வன்செயல்களுக்குப் பயந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம்பெயர்ந்து வரும் சிங்களவர்களுக்கு இப்படி காணி வழங்கப்படின் அப்பகுதிகளில் சிங்கள சனத்தொகை குறைந்துவிடும் என்று குருநாகல் மாநகரசபை சுயேச்சை உறுப்பினர் திரு. கே. ஆர். டி சில்வா தெரிவித்தார்.

ஆனால் மனிதாபிமான முறையில் அக்குடும்பத்துக்கு காணி வழங்கப்படுவதை சகல உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர். (இ-எ)

## 9 தோட்டங்களி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் தடைப்பட்டு உள்ளன.

தொழிற்சங்கப் பிரமுகர் சேசையா காணமற்போன தினத்தில் இருந்து சென் கூம்ப்ஸ் வதாட்டத் தொழிலாளர்கள் ஏற்கனவே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றனர். (இ-ஐ-எ)

## நீத்தார் பட்டியல்

### பர்ணந்து கஸ்பார்

06-01-1987-ல் காலமாகிவிட்டார்

இவர் அந்தோனியாவின் அன்புக் கணவரும் காலம் சென்ற பிரன்சிஸ், அன்ரன் (வர்த்தகர்) அந்தோனிப்பிள்ளை சேவியர் அவர்களின் அன்புத் தந்தையும் பாக்கியம், பிலோமினா, சரோசா அவர்களின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் 7-1-1987 புதன்கிழமை பி.ப 4-00 மணிக்கு அன்னாரின் 23/4, சென் பற்றிக்ஸ் வீதி, குருநகர். இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

குருநகர் க. அன்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org